### மிகவும் சுலபமான நிபந்தனைகள், கவர்ச்சிகரமான சலுகைக

இத்திட்டத்தில் நிபந்தனைகள் சுலபமாக்கப்பட்டு இறப்புக் காப்பும் முதிர்வுத் தொகையும் மாதப் பிரீமியத்தை சார்ந்ததாக வடிவமைக்கப்பட்டுள்ளது. வயது மற்றும் காலவரை மாறுபடினும் பிரீமியம் மாறா.

கீழ் கண்ட பல சிறப்புகள் இத்திட்டத்தில் அமையப் பெற்றுள்ளது.

### இறப்புக் காப்பு

இறப்புக் காப்பு மாத பிரீமியத்தில் 250 மடங்கும், கட்டிய பிரீமியம் (முதல் வருட பிரீமியம், வேறு கூடுதல் பிரீமியங்கள் நீங்கலாக), மற்றும் பற்றுறுதிக்கான கூடுதல் தொகை (ஏதாகிலும் நிர்ணயிக்கபபடின்) என இவை அனைத்தும் வழங்கப்படுகிறது.

### பகுதி ஒப்புவித்தல் (Partial Surrender)

முன்று ஆண்டுகள் பிரீமியம் செலுத்திய பின்னர் பகுதி ஒப்புவித்தல் எனும் சலுகையை இத்திட்டம் பெறுகிறது. இதனால் ஒப்புவித்த பின்னரும் இத்திட்டம் குறைந்த காப்புத் தொகை, குறைந்த பிரீமியம் மற்றும் குறைந்த முதிர்வுத் தொகையுடன் தொடர்கிறது.

### பிரீமியம் விடுமுறை

பிரீமிய விடுமுறை எனும் சிறப்பு சலுகையும் உண்டு. இதனால் 3 வருட பிரீமியம் செலுத்திய பின்னர், மேர் கொண்டு பிரீமியம் செலுத்த வில்லையென்றாலும் 12 மாதங்களுக்கு தொடாந்து இறப்புக் காப்பு கிட்டுகிற

### விபத்துப் பாதுகாப்பு மற்றும் திறனிழப்பு பாதுகா

மிகக்குறைந்த தொகையை பிரீமியத்துடன் சேர்த்து கட்டுவதன் மூலம் இச்சலுகையை பாலிசிதாரர் பெறலாம். இதன் மூலம் பாலிசி நடப்பு காலத்தில் பாலிசிதாரர் விபத்தினால் இறக்க நேர்ந்தால் ஒரு கூடுதல் காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. இச்சலுகை பெற அதிக பட்ச உச்ச வரம்பு வயது 70 ஆகும். இவ்விபத்துப் பாதுகாப்பு தொகை மற்ற பாலிசிகளில் பெறப்பட்ட விபத்துக் காப்பை பொறுத்து அமையும்.

அவ்வாறு அல்லாமல் விபத்தின் காரணமாக திறனிழப்பு ஏற்படுமாயின் ஒரு காப்பீட்டுத் தொகையை 10 வருடத்திற்கு மாதத்தவணையாக பிரித்து வழங்கப்படுகிறது. அத்துடன் திறனிழப்பு ஏற்பட்ட தேதியிலிருந்து பிரீமிய விலக்கும் வழங்கப்படுகிறது.

### பற்றுறுதிக்கான கூடுதல் தொகை

எல்.ஐ.சி.யின் அனுபவத்தைப் பொறுத்து பற்றுறுதிக்கான கூடுதல் தொகை நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் இத்திட்டத்தில் 10 ஆண்டுகள் நிறைவுற்ற திட்டங்களுக்கு மட்டுமே இது வழங்கப்படும்.

### பணத்திற்கு முழு பாதுகாப

நாம் முதலீடு செய்கின்ற பணம் பாதுகாப்பாக இருக்க வேண்டுமாயின் அது பாதுகாப்பானோர் கைகளில் இருக்க வேண்டியது அவசியமாகிறது. அந்த வகையில் எல்.ஐ.சி.யில் முதலீடு செய்கின்ற தொகை நேர்மையான நிர்வாகம் தெளிவான முதலீட்டுக் கொள்கை என பல்வேறு சிறப்புகளைக் கொண்ட நிர்வாகத்தின் வசம் இருக்கிறது.

### வருமான வரி சலுகைகள

**Section 80(C) of IT Act.**

மேற்கூறிய வருமானவரி விதியின் படி காப்பீட்டுக்காக கட்டப்படும் பிரீமியத்தொகைக்கு வருமான வரி விலக்களிக்கப்படுகிறது. நிகர வருவாயில் இப்பாலிசிக்கான பிரீமியத்தொகை நேரடியாக குறைக்கப்படுகிறது. இச்சலுகைக் கான அதிக பட்சமாக உச்ச வரம்பு 1,00,000 ஆகும்.

இந்த சலுகை பாலிசிதாரரின் பெயரிலுள்ள பாலிசிகளுக்கு மட்டுமல்லாமல், மனைவி மற்றும் பிள்ளைகளின் பாலிசிகளுக்கும் பொருந்தும். (மணமான மகள்களின் பெயரில் உள்ள பாலிசிகளும் இதில் சேரும்)

**Section 10(10D) of IT Act.**

வாழ்வு காலப் பயன்கள், முதிர்வுத்தொகை அல்லது இடையில் இறப்பு நேர்ந்தால் வழங்கப்படும் இறப்புச் காப்புத் தொகை இவை அனைத்திற்குமே வருமான வரி விலக்கு அளிக்கப்படுகிறது.. அந்த தொகைக்கு வருமானவரி செலுத்த தேவையில்லை. இது காப்புத் திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு சலுகையாகும்.

**கடன் வசதி**

மூன்று வருடங்களுக்கு மேல் பிரீமியம் செலுத்திய பின்னர் மிகக்குறைந்த வட்டி விகிதத்தில் கடன் பெறலாம். கடன் பெறுவதற்கான விதிமுறைகள் மிக விரைவாகவும் சுலபமாகவும் பெறும் வண்ணம் வடிவமைக்கப் பட்டுள்ளன..

**சிறப்பு ஒப்புவித்தல் எனும் கூடுதல் சலுகை**

மூன்று வருடங்களுக்கு மேல் பிரீமியம் செலுத்திய பின்னர் திட்டத்திலிருந்து விலகிக் கொள்ளலாம். திட்டதிலிருந்து வெளியேறும் காலத்தைப் பொறுத்து ஒப்புவித்தல் தொகை அமையும்.

| **வெளியேறும் காலம்** | **தொகை** |
| --- | --- |
| 4 வருடத்திற்கு முன்னர் எனில் | முதிர்வு காப்புத் தொகையில் 80 சதம் |
| 4 வருடத்திற்கு மேல் 5 வருடத்திற்குள் | முதிர்வு காப்புத் தொகையில் 90 சதம் |
| | முதிர்வு காப்புத் தொகை மற்றும் ப.கூ.தொகை (தகுதி அடிப்படையில்) |